## நாஉல பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 06 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 அக்டோபர் 03 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையில் 1.3.3, 1.3.4 மற்றும் 1.3.5 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------------

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) நாஉல பொது சன விளையாட்டுத்திடலின் வேலி நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 150,000 இற்கான செலவு மற்றும் ரூபா 32,350 இற்கான பொருட் பதிவேட்டுப் பண்டங்களின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) கடந்த 11 வருடங்களுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 375,208 இற்கான கணக்காய்வுக் கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்கான கடன் கொடுத்தோர் மீதி ரூபா 110,488 நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 47,585 இற்கான நிர்மாண வேலை தடுத்து வைத்தல் பணம் பொது வைப்புக் கணக்கிற்கு மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால் கடன் கொடுத்தோர் மீதி அப் பெறுமதியால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டு தொடர்பாக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 27,030 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,076,555 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 71,668 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் மீண்டும் கடன்பட்டோரின் கீழும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக் கூற்றுக்களுடன் காசு பாய்ச்சல் கூற்றொன்று மற்றும் தேறிய சொத்துக்களின் வித்தியாசங்கள் பற்றிய கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 கணக்கும் கிடைக்க வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,512,641 ஆகக் காணப்பட்டதுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 330,784 இற்கான மீதி ஒன்றும் அதில் அடங்கியிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,447,546 ஆக காணப்பட்டதுடன், 01 வருடம் 2 வருடத்திற்கு இடைப்பட்ட காலத்தை சேர்ந்த ரூபா 47,500 இற்கான மீதி ஒன்று இதில் அடங்கியிருந்தது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் ரூபா 11,487,789 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியவில்லை.

1.3.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) பிரிவு 132 | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 210,000 செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) பிரிவு 154(1) | 02 காணிகளின் ஏல விற்பனை தொடர்பாக நூற்றிற்கு 01 இற்கான வரி ரூபா 40,800 இற்காக குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அத்துடன் 03 காணிகளின் ஏல விற்பனவு தொடர்பாக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | |
| (i) விதி 99 | ரூபா 37,064 இற்கான சான்றுபடுத்தப்படாத 07 உறுதிச் சான்றுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) விதி 207 மற்றும் 208 | போட்டி அடிப்படையில் கூறுவிலைகள் கோறப்படும் முறைமையொன்று கடைபிடிக்கப்படாமல், ஜேஸீபீ இயந்திரம் ஒன்றினை சேவையில் ஈடுபடுத்துவதற்காக 03 சந்தர்ப்பங்களிலும் மற்றும் ஹியும் குழாய்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக முறையே ரூபா 113,970 மற்றும் ரூபா 195,750 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,987,997 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,112,738 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,124,741 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீதவரி

ஆண்டிற்காக பில் போடப்பட்ட வருமானங்களில் ரூபா 1,048,546 மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைகளில் ரூபா 841,262 ஆகக் கூட்டுத்தொகை ரூபா 1,889,808 தொகை ஒன்று மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.2 வாடகை

------------

முன்னைய பிரதேச சபைக் கட்டடத்தில் கடை ஒன்று சட்ட ரீதியான உடன்படிக்கை ஒன்று இன்றி ரூபா 1,500 மாதாந்த வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் 11 மாத நிலுவை வாடகையான ரூபா 16,500 இனை அறவீடு செய்வதற்கும் முறைப்படியான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 03 கடைகள் தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளல் மற்றும் வாடகை அறவீடு செய்தல் இன்றி வர்த்தக விளம்பர அச்சகம் ஒன்றை நடத்துவதற்கு வெளி நபர் ஒருவருக்கு வசதி வழங்கப்பட்டிருந்தது.

2.2.3 நீர்க் கட்டணம்

----------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாகவுள்ள நீர்க் கட்டண மீதி ரூபா 319,362 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 172,585 மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 1,475,000 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஓய்வுதிய நிதியத்திற்கு மாதாந்தம் பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,923,445 இற்கான தொகை ஒன்று செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) 1999 ஜனவரி 23 திகதி விபத்துக்கு உள்ளாகியிருந்த டபள்கப் வண்டியின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் இருந்து காப்புறுதி உரிமையின் மூலம் மேவகை செய்யப்படாத ரூபா 152,200 இற்கான தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் ''ஈ - நென பியஸ'' தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தல் செயற்திட்டத்திற்காக 2012 நவம்பர் 15 ஆந் திகதி ரூபா 607,617 பெறுமதியான பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் சபைக்குக் கிடைத்திருந்த போதும் அச் செயற்திட்டம் அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை 548 என இனங் கண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் 160 கடைகளுக்கு மாத்திரம் அனுமதிப் பத்திரம் வழங்கியிருந்தது. அத்துடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு வசதி வழங்கியுள்ளது.

(உ) மத்திய மாகாண பிரதான செயலாளரின் 1995 திசெம்பர் 27 திகதிய இலக்கம் 95/9 கொண்ட கணக்குகள் சுற்றுநிருபத்தின் பந்தி 06 இன் பிரகாரம் ரூபா 201,325 இற்கான நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சபைக்கு சொந்தமான இரண்டு காணிகள் அங்கீகாரம் இன்றி குடியேறியிருந்தவர்கள் பயன்படுத்தியிருந்த போதும் அவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(எ) 2006 மற்றும் 2008 ஆண்டுகளின் போது விற்பனை செய்யப்பட்ட ஏலவிற்பனவு காணிகள் 05 இல் இருந்து பிரதேச சபைக்கு நூற்றிற்கு 10 இற்கான காணிப்பகுதியை விட 245 பர்சஸ்கள் குறைவாக உரித்தாக்கப்பட்டிருந்தது.

3.2 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

---

ரூபா 100,000 பெறுமதியான கை டிரக்டர் வண்டியும் டேலரும் 10 வருடங்களாக செயற்படாது காணப்பட்டது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளில் மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் அல்லது சேதன உர உற்பத்தி செயற்பாடு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவுகள் இடையே, ஏற்பாடுகள் மாற்றப்பட்ட பின்னர், 12 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே நூற்றிற்கு 23 நூற்றிற்கு 93 இடையே வீச்சில் முரண்களும் 39 செலவு விடயங்கள் தொடர்பான தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவுகளிடையே நூற்றிற்கு 11 முதல் நூற்றிற்கு 98 வரை வீச்சில் முரண் ஒன்றும் காணப்பட்டதுடன் 12 செலவு விடயங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 675,000 ஏற்பாடுகளிலிருந்து செலவு ஏதும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்படல் அல்லது சேமிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் கிடைக்கப் பெறாக கணக்காய்வு ஐயவினாக்கள்

---

கொடுக்கல் வாங்கல்கள் பெறுமதி ரூபா 599,353 இற்கான கணக்காய்வு ஐயவினா ஒன்றிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) நிதிக் கட்டுப்பாடு